**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

****************

**<u>ஊடக அறிக்கை</u>**

**கொவிட் - 19 காரணமாக புதுப்பிக்கப்பட்ட பயண ஆலோசனை**

01. இராஜதந்திர, உத்தியோகபூர்வ, ஐநா/சர்வதேச அமைப்புக்கள், வேலைவாய்ப்பு அல்லது நிகழ்ச்சித்திட்ட வகைகள் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்காக வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்பட்ட சகல விசாக்களும் இந்தியாவிலிருந்தும் இந்தியாவை நோக்கியும் மேற்கொள்ளப்படும் சகல சர்வதேச பயணங்கள் மீதானதுமான தடை உத்தரவினை இந்திய அரசு நீக்கும் வரையில் இடைநிறுத்தம் செய்யப்படுவதாக இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

02. இந்தியாவில் தங்கியிருக்கும் வெளிநாட்டு பிரஜைக ளின் விசாக்கள் (regular visa, e-visa or stay stipulation) காலாவதியாகியிருந்தாலோ அல்லது 2020 பெப்ரவரி முதலாம் திகதி முதல் இந்திய அரசாங்கத்தால் சர்வதேச பயண தடை நீக்கும் வரையி லான காலப்பகுதிக்குள் காலாவதியடையுமாக இருந்தாலோ தமது விசாவினை இலவசமாக புதுப்பித்து கொள்வதற்காக வெளிநாட்டவர்கள் பிராந்திய பதிவு அலுவலகத்தில் (FRRO ) விண்ணப்பிக்க முடியும். அதனடிப்படையில் மேலதிக காலம் தங்கியிருந்தமைக்கான தண்டம் எதுவு மின்றி இந்திய அரசாங்கத்தால் சர்வதேச பயணத் தடை நீக்கப்படும் நாளிலிருந்து 30 நாட்களுக்கு விசா நீடிக்கப்படும். அதேபோல வெளிநாட்டு பிரஜைகள் வெளியேறுவதற்கும் இதே முறையினூடாக அணுகி அனுமதியினைப் பெறமுடியும்.

03. வெளிநாடுகளில் வாழும் இந்திய பிரஜைகளுக்கான (OCI) அட்டை வைத்திருப்பவர்களின் விசா இன்றிப் பயணிக்கும் அனுமதி இந்தியாவிலிருந்தும் இந்தியாவை நோக்கியும் மேற்கொள்ளும் சர்வதேச பயணங்கள் மீதான தடை இந்திய அரசால் நீக்கப்படும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது. தவிர்க்க முடியாத காரணம் ஒன்றுக்காக இந்தியாவுக்கு பயணிக்க விரும்பும் OCI அட்டை வைத்திருப்போர் அருகிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தை தொடர்பு கொள்ளவும். தற்போது இந்தியாவில் தங்கியுள்ள OCI அட்டை வைத்திருப்போரின் OCI அட்டைகள் அவர்கள் இந்தியாவில் தங்கியிருக்கும் காலப்பகுதி வரை செல்லுபடியாகும்.

* * * * *

கொழும்பு

11 மே 2020